REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 7உ புதன் (23—11—55) ★ ★ வெளியீடு: கார்த்திகை 8உ வியாழன் (24—11—55) [இதழ் 138

திரு-கொச்சியில் யுரேனியக் கனிப்பொருள்

திருவனந்தபுரம் நகரை அடுத்த மணற்பாங்கான ஒரு பகுதியில் 'யுரேனியம்' கனிப்பொருட்கள் கலந்த மணற் பரப்புகள் இருப்பதாகவும், அதுபற்றி சர்க்கார் ஆராய்ச்சிகள் நடத்தி வருவதாகவும் திரு-கொச்சி முதலமைச்சர் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

அக்குறிப்பிட்ட இடத்திலுள்ள மணலில் யுரேனியக் கனிப்பொருள் கலந்திருப்பது நிரூபிக்கப்பட்டாலும் என்ன சதவிகிதத்தில் கலவை இருக்கக்கூடும் என்பது தெரியவில்லை என்று அவர் அறிவித்துள்ளார்.

'மா.பு.கு.முடிவால் தென்னகம் பாதிக்கப்படும்'

'வடவர் ஆதிக்கம் மேலும் கூடுதலாகும்'

'ஜனநாயகம் மறுக்கப்படுகிறது—மாய்க்கப்படுகிறது'

டாக்டர் கே. பி. மேனனின் கருத்து

"மாநிலக் குழுவினரின் சிபாரிசுகள் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டால், அச்செய்கை, நாட்டின் ஒற்றுமைக் குறைவுக்கும், அதிருப்திக்கும், இந்திய யூனியனின் அழிவுக்குமாக விதைக்கப்படும் விதையாகவேதான் இருக்கும்.

"மாநில புனரமைப்புக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுகளை ஒட்டி தரப்படுகிற இந்தியாவின் நிலப் படத்தைப் பார்க்கும்போது, உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பம்பாய் ஆகிய இரண்டு மூன்று மாநிலங்கள் மட்டும், அப்படத்தின் பாதி பாகத்தைக் கொண்டவையாகிவிடுகின்றன. இந்தியாவிலுள்ள மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்ட தொகையினரும் இந்த மாநிலங்களில்தான் வாழ்கின்றனர். இத்தகு மாநிலங்கள், பாராளுமன்றங்களில் பெரும் அளவு பலம் வாய்ந்தவைகளாக இருப்பது, ஜனநாயகத்திற்கே முரண்பட்டதும், ஜனநாயகத்தைப் புறக்கணிப்பதுமான ஒன்றாகத்தான் இருக்கும்.

"உத்திரப் பிரதேசமும், மத்தியப் பிரதேசமும், பாராளுமன்றத்தில் 200 இடங்களைக் கொண்டிருக்கிறதென்றால், இந்நாட்டின் 'தலைவிதி'யை நிர்ணயிப்பதே அவர்களுடைய கைகளில்தான் இருக்கிறது என்றாகிறது. அப்படியானால் தென்னாட்டு மாநிலங்களின் எதிர்கால நிலை என்ன?

"தென்னவர்மீது வடநாட்டவரின் ஆதிக்கப் பிடிப்பு இருந்து வருவதை ஏற்கனவே இங்குள்ள திராவிடர் இயக்கம் எடுத்துக் கூறி வருகிறது. தற்போதுள்ள நிலையைப் பார்த்தால், மாநில புனரமைப்புக் குழுவினரின் சிபாரிசுகள், தென்னவர் மீதுள்ள வடநாட்டவரின் ஆதிக்கத்தை மேலும் திணித்து வருவதாகத்தான் காணப்படுகிறது. எனவே, மாநிலக் குழுவினரின் அறிக்கைப்படி, மாநிலங்களின் அமைப்புகள் ஏற்படுத்தப்படுமானால், ஒன்று திரட்டப்பட்ட வடநாட்டவரின் வாக்குரிமைக்கு எதிராக, தென்னாட்டவரின் சிதறப்பட்ட வாக்குரிமை பலங்குன்றிப் போய்விடும்.

"'மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம் என்றால், நாம், நமது நாட்டிலேயே கீழான குடிமக்களாக்கப்படுவதை நம்மை நாமே ஒப்புக் கொள்ளுகிறோம்' என்பதை தென்னாட்டவர் உணர்ந்தாக வேண்டும்."

"சோவியத் ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளிலெல்லாம், பாராளுமன்றங்களில், எவ்வளவு சிறிய மாநிலமாக இருந்தபோதிலும், மற்ற மாநிலங்களைப் போன்று சமஉரிமை கொண்டவைகளாக இருக்கின்றன; ஆனால், அந்த நிலை இன்று இந்தியாவில் இல்லை. அவைகளுக்குச் சம அந்தஸ்து கொடுக்கப்படுவதற்கான பாதுகாப்புகளும் எவையும் கிடையாது; ராஜ்யங்கள் சபையில் அவைகளுக்குச் சமஉரிமையும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, மாநிலக் குழுவினரின் சிபாரிசுகள், இந்திய ஒற்றுமைக் குலைவுக்கும், மக்களிடையே அதிருப்திக்கும் தூவப்படும் விதை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்."

—இவ்வாறு, சென்னை சட்ட சபைக் கூட்டத்தில் மாநில புனரமைப்புக் குழு விவாதத்தின்போது, 'மாநிலக் குழுவினரின் சிபாரிசினை முழுதுமாகப் புறக்கணிக்க வேண்டும்' என்ற திருத்தப் பிரேரபணை ஒன்று கொண்டுவந்து, தமது பிரேரபணை மீது பேசுகையில், சட்ட சபை ம. சோ. கட்சித் தலைவர் கே. பி. மேனன் குறிப்பிட்டிருக்கிறார்.

விவாதத்தின்போது, தமிழ் நாட்டு உறுப்பினர்கள், கேரள மாநிலத்தில் இணைந்திருக்கவேண்டுமென்று மாநில புனரமைப்புக் குழுவினர் சிபாரிசு செய்த தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் சென்னையுடன் இணைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றனர்.

மற்றும் சில தமிழ்நாட்டு உறுப்பினர்கள் தேவிகுளம், பீர்மேடு இணைக்கப்பட்ட சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்ற பெயரிட வேண்டுமென்று கோரியுள்ளனர்.

தென் கன்னட உறுப்பினர்கள், காசர்கோடு தாலுகாவில் செல்லும் சந்திரகிரி ஆற்றினை எல்லைக் கோடாகக்கொண்டு, உத்தேச கர்நாடக, கேரள மாநிலங்கள் அமைய வேண்டும் என்று கோரியிருக்கின்றனர்.

மொழி அடிப்படையை மட்டுமே முழுதுமாகக் கொண்டில்லாமல், பொருளாதார அடிப்படையையும் கூடக் கருத்தில் கொண்டுதான் கேரள மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் சிலர் கூறியிருக்கின்றனர்.

கன்னட, கேரள, தமிழ் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்தை இவ்வாறு தெரிவித்திருக்க, டாக்டர் கே. பி. மேனன், 'இப்போது இருக்கிற மாநில அமைப்புக்களே மேலும் 20 ஆண்டுகளுக்கு நீடித்திருக்க வேண்டும்' என்ற மாறுபட்டக் கருத்தொன்றினைத் தெரிவித்திருக்கிறார்.

"வடநாட்டில், அளவில் பெரிய மாநிலங்கள் ஏற்படுத்தப்படுவது, தென்னவரின் வலிமை குறைந்து, செயலற்ற தன்மை ஏற்படுவதற்கும் ஏதுவான ஒன்றாகும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பம்பாய் சட்டசபை திடீரென ஒத்திவைப்பு

பம்பாய், நவ. 22—

மாநிலக் குழுவினரின் சிபாரிசுகள் பற்றி விவாதிப்பதற்காக நடைபெற்றுவந்த பம்பாய் மாநில சட்டசபைக் கூட்டம், நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்ற பிரேரபணை நிலவரி அமைச்சரான மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பி. எஸ். ஹிரே என்பவரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது; பிரேரபணைக்கு ஆதரவாக 242 வாக்குகளும், எதிராக 28 வாக்குகளும் கிடைத்தனவாம்.

மராட்டிய கலவரத்தின் எதிரொலி!

குடிமக்கள் பாதுகாப்புப் படை தேவையாம்!

பாடீலின் புதிய போர்க்கோலம்!

பம்பாய், நவ. 21—

பம்பாய் பிரதேச காங்கிரஸ் குழுத் தலைவர் ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

'அமைதி கோரும் குடிமக்களின் உயிரையும், உடைமையையும் பாதுகாத்துக் கொள்வது' என்ற பெயரில், 'திட்டமிடப்பட்ட, உருவான எதிர்ப்பைக் காட்டிக்கொள்வதற்காக ஒரு பாதுகாப்புப் படையை உருவாக்க வேண்டுமாம். அக்குடிமக்களின் தற்காப்புப் படைக்கு 'பம்பாய் பாதுகாப்புப் படை' எனப் பெயரிடப்படுமாம்.

"பம்பாய் நகரில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற சம்பவம், திடீரென்று கட்டவிழ்த்து விடப்படும் சமூக விரோதிகளுடைய பலாத்காரச் செயல்களுக்கு எதிராகத் தங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்ற சிந்தனையைப் பலருக்குக் கொடுத்திருக்கிறது.

"அத்தகு சூழ்நிலையில் வழக்கமான—சிறப்பான போலீஸ் முன்னேற்பாடுகளும் தேவைக்குக் குறைவாகவே இருந்துவிடுகின்றன. இந்தக் கேட்டை திட்டமிட்டு உருவாக எதிர்க்க முடியாமல், அமைதி விரும்பும்—சட்டத்திற்கு மதிப்பளித்தும் நடக்கும் பெரும்பான்மையினர் சப்பாணி போல் குந்திக்கிடக்க வேண்டியதாக இருக்கிறது. இந்நிலை முன்னரே பலமுறை ஏற்பட்டு இருக்கிறது.

"இதைத் தடுக்க குடிமக்களின் பாதுகாப்புப்படை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்."

"செல்வாக்குப் பெற்றுள்ள குடிமக்கள் நகர காங்கிரஸ் மாளிகையில் செவ்வாய் மாலை கூடி கலந்தாலோசிக்க வேண்டும்."

என்றெல்லாம் பாடீல் கூறியுள்ளார்.

பம்பாய் கலவரம்: 1 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம்?

160 சர்க்கார் பஸ்கள் சேதமுற்றனவாம்!

12 பேர் பலி — 405 பேர் கைது

பம்பாய், நவ. 22—

நேற்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள், கல் வீச்சுக்களின் காரணமாகக் கொல்லப்பட்ட 10 பேர்களைத் தவிர, காயம்பட்டவர்களில் மற்றும் இருவர் இன்று உயிர்துறந்தனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

துப்பாக்கிப் பிரயோகம், கல் வீச்சுக்களால் காயம்பட்டோர் 266 பேரில் 94 பேர் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 135 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுவிட்டனர் என்றும், மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்ட 94 பேர்களில் இருவர்தான் படுகாயத்தின் காரணமாக இறந்துபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட 12 பேர்களின் சவங்களும் அடையாளங் கண்டு பிடிக்கப்பட்டு அவரவர் உறவினரிடத்தில் சேர்க்கப்பட்டுவிட்டனவாம்.

பம்பாய் போலீஸ் அதிகாரி ஒருவரது 15 வயதுப் பையன் ஒருவனும் கொல்லப்பட்டவர்களுள் ஒருவனாம்!

இன்று காலையிலிருந்து பஸ்களும், டிராம்களும், வழக்கப்படி ஓடிக்கொண்டிருக்கின்றனவாம்.

தாதர் இரயில் நிலையத்திற்கு வெளியே, சுமார் 12 பேர்களைப் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல போலீஸ் லாரிக்காகக் காத்துக்கொண்டிருந்தபோது, அந்தப் பன்னிருவரும், போலீசார் மீது சோடா புட்டி போன்றவைகளை வீசினராம். உடனே போலீசார் அவர்களைத் துரத்தியிருக்கின்றனர்.

இச்சம்பவங்களை ஒட்டி, போலீசார், நேற்றும் சுமார் 405 பேர்களை நகரின் பல்வேறு இடங்களில் கைது செய்திருக்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களின் விளைவாக, இரண்டு நாட்களிலுமாக, பொது, தனியார் சொத்துக்களுக்கு ரூ. 1 கோடி வரையில் சேதமடைந்திருக்கக் கூடும் என்று அதிகாரப் பற்றற்ற செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

மொத்தமாக 160 சர்க்கார் பஸ்களும், 15 டிராம் வண்டிகளும் சேதப்படுத்தப்பட்டன என்றும், 8 பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும், ஒரு போலீஸ் சாவடி முழுவதும் தீகொளுத்தப்பட்டது என்றும் அக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

முதல் நாள் முழுவதுமாக தீயணைப்புப் படையினை சேர்ந்த 5 பேர் காயம்பட்டதாகவும், பல தீயணைக்கும் மோட்டார் வண்டிகள் கல்வீச்சுக்கு உள்ளாக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

நூற்றுக்கணக்கான தனிப்பட்டோர் கார்கள் சேதப்பட்டதுடன், 5 போலீஸ் சாவடிகள் தாக்கப்பட்டு சேதமுற்றிருந்தும், மேலும், எவ்வளவு மின்சார விளக்குகள் தூளாக்கப்பட்டிருக்கின்றன—எத்தனை இடங்களில் தண்ணீர் தொட்டிகள் நாசப்படுத்தப்பட்டுள்ளன என்று மதிப்பெடுக்க முடியவில்லையாம்.

மரங்களுக்குக் கீழே பஸ்கள் எரியூட்டப்பட்டனவாதலால், அந்த நெருப்பின் காரணமாக அந்தந்த மரங்களுங்கூட எரிந்திருக்கலாம் என்றும், எனவே இன்று நடைபாதை வழியே செல்லுவோருக்கு ஆபத்து விளைவிக்காதபடி, எரிந்து கனல் கொண்டுள்ள மரக்கிளைகள் வெட்டப்பட்டுள்ளன என்றும் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

பெல்லாரி கிளர்ச்சி: 202 பேர் கைது!

பெல்லாரி, நவ. 22—

'பெல்லாரியை ஆந்திராவுக்கு மாற்றக்கூடாது' என்ற கிளர்ச்சி சம்பந்தமாக இன்று மேலும் 37 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

துங்கபத்திரா நீரை மைசூர் கால்வாய்க்குத் திருப்பிவிட்டதற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இக்கிளர்ச்சி சம்பந்தமாக இது வரையில் மொத்தம் 202 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்லைத் தகராறு: மந்திரி சபை முடிவு?

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறுகளை, எல்லைக் கமிஷனுக்கு விடுவதென்று ஆந்திர மந்திரி சபை முடிவு செய்துள்ளதாக செய்தி ஒன்று கூறுகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 23—11—'55 புதன்

ஆதிபத்தியத்திற்கு அர்ப்பணம்!

பம்பாய் சௌபாதி மணல் பரப்பில் மாபெரும் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது.

மாநில காங்கிரஸ் குழுவின் சார்பில் கூட்டம் நடைபெற்றது.

இரண்டு இலட்சம் மக்கள் கூடி இருந்தனர்.

மாகாணங்களைத் திருத்தி அமைப்பது குறித்து காங்கிரஸ் மேலிடத்தார் கொண்டிருந்த முடிவை, பம்பாய் மக்களுக்கு விளக்கிக் கூறுவது என்பது கூட்டத்தின் நோக்கம்.

துவக்கம் முதல் இறுதிவரை இடையறுது கூட்டத்தில் குழப்பம் இருந்து வந்தது!

ஒலிபெருக்கி முன் பேசுவதற்கு வந்து நின்ற ஒவ்வொரு பேச்சாளர் மீதும், கற்கள் விழுந்தன—பாதரட்சைகள் விழுந்தன!

சட்டசபை காங்கிரஸ் கட்சி கொரடாவான சிலாம் அவர்களுக்கும், மேற்குறிப்பிட்டுள்ள மரியாதை கிடைத்தது!

பம்பாய் காங்கிரஸ் முதல்வரான படீல் அவர்களுக்கும் அதே வரிசைதான் பரிசாகக் கிடைத்தது!

பம்பாய் மாகாண காங்கிரஸ் குழுத் தலைவர் படீல் அவர்களின் தலையை மேடை மீது கண்டதுமே, இந்த அமர்க்களம் துவங்கிவிட்டது!

கற்கள் வீசப்பட்டன! பாதரட்சைகள் பறந்தன! கூச்சல் விண்முட்டக் கிளம்பின!

மக்களை அமைதியாக்க—கொந்தளிப்பைத் தணிக்க—படீல் எடுத்துக்கொண்ட முயற்சி, காட்டிய சாகசம், பேசிய பசப்பு, எதுவுமே பலன் தரவில்லை; அதற்கு மாருகக் கொந்தளிப்பைப் பலமடங்கு பெருக்கிவிட்டது!

தோல்வி கண்ட படீல், முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களின் வருகைக்காகக் காத்துக்கிடந்தார் மேடைமீது.

தேசாயும் வந்தார்! அவர் வருகைக்காகக் காத்துக் கிடந்த கற்களும் பாதரட்சைகளும் அவருக்கு அணி செய்தன!

'அவருக்குப் படுகாயமேற்படவில்லை' என்று நிருபர் விளக்கம் தரும் வகையில் நிலைமை நெருக்கடியாக இருந்திருக்கிறது.

முதலமைச்சர் பேசப் பேச கூச்சலும் கூடிற்று! கல்வீச்சும் பெருகிற்று!

'உங்கள் கருத்தை அறிவிக்க உரிமை அளிப்பேன். ஆனால் பலாத்காரத்தையும் காலித் தனத்தையும் பொறுக்க மாட்டேன்' என்று எச்சரித்தார்—முதலமைச்சர் அல்ல—மாகாண காங்கிரஸ் தலைவர் படீல் அவர்கள்!

இக்கொந்தளிப்பின் விளைவாக 78 நபர்கள் கைதாகி உள்ளனர்!

கல்லடியினால் 50 நபர் வரை காயப்பட்டுள்ளனர்!

'பம்பாயுடன் கூடிய தனி மாராட்டிரம் கிடையாது'

காங்கிரஸ் மேலிடத்தின் தீர்ப்பு இது!

'பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மாராட்டியமே எங்கள் தேவை'

இது சிவாஜி வழிவந்தவரின் இதயகீதம்!

இதன் எதிரொலிதான் காங்கிரஸ் பொதுக்கூட்டமாகவும், கூட்டத்திலிருந்தவர்களின் கல்வீச்சாகவும் காட்சி தந்துள்ளன.

இது முதல் நாள்! அடுத்த நாள் இதே குருட்சேத்திரம் மிக மிகக் கோரமானதாகவும், கொலை மலிந்ததாகவும், கொடுமை நிரம்பியதாகவும் நடைபெற்று இருக்கிறது!

ஆத்திரமடைந்த மக்கள்! ஆதிக்க வெறி பிடித்தலையும் ஆளவந்தார்கள்!

★

பலமுறை போலீஸ் படை சுட்டது!

இராணுவமும் களத்தில் குதித்தது!

பாரதபுத்திரர் பதின்மர் மாண்டனர்!

படுகாயமுற்றவர் தொகை முன்னூறு என பட்டியல் கிறது!

போலீஸ் துப்பாக்கியால் சுட்டது!

தடிகொண்டு தாக்கியது!

கண்ணீர்ப் புகைக் குண்டும் வீசியது!

★

எட்டு அரசாங்க 'பஸ்கள்' சுட்டெரிக்கப்பட்டன!

ஒரு அரசாங்க 'லாரி' கொளுத்தி நாசஞ்செய்யப்பட்டது!

ஒரு போலீஸ் நிலையம் சுட்டு சாம்பலாக்கப்பட்டது! உடைக்கப்பட்ட பொருட்களும் ஏராளம்! நொறுக்கப்பட்ட சாளரக் கண்ணுடிகள் எண்ணிலடங்காதவை!

155 நபர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்!

மராட்டிய மண்டலம் கோருவோரின் போக்குக் கண்டு திகைப்படைந்திருக்கும் போலீசுக்குப் பக்கத்துணையாக இராணுவமும் அழைக்கப்பட்டது! பம்பாய் வீதிகளில் இராணுவமும், போலீஸ் படையும் அணிவகுத்து நிறுத்தப்பட்டுள்ளன!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினிடமிருந்து இந்தியத் துணைக் கண்டத்தை விடுவிக்க காங்கிரஸ் நடத்திய போராட்டத்தில் இத்தகு ஆவேசம் தலைவிரித்தாடினதாக இதுவரை எவரும் கூறிடக்காணேம்.

உப்பள முற்றுகை, கள்ளுக்கடை மறியல் போன்ற காங்கிரஸ் போராட்டத்தை எண்ணி நாம் 'ஆவேசம்' இல்லையே எனக் குறிப்பிடவில்லை; ஆகஸ்டு போராட்டத்தைக் கருத்துள் கொண்டுதான் அவ்வாறு கூறினேம்.

காங்கிரஸ் நடத்திய ஆகஸ்டுப் போராட்டத்தில் 'ஆவேசம்' கட்டைத் தாண்டவில்லை என்பதுடன், அதனை அடக்கத் துணிந்த ஆங்கில அதிகாரிகளிடைகூட, காங்கிரஸ் ஆளவந்தார்களிடம் காணப்பெறும் அளவிற்கு 'தலை வீக்கம்' இருந்தது கிடையாது—நிச்சயமாகக் கிடையாது!

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக்காலத்தில், பொதுமக்களில் பத்து பேர் சாக, அதுவும் இராணுவத்தினர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாக நேரிட்டிருந்தால், காங்கிரஸ் ஏடுகள், எழுதுகோலை கனல் கக்கி ளாக்கி, காரசாரமான சொற்களை எரி குண்டுகளாக மாற்றி, காரணமாக இருந்த அதிகாரிகள் மீது வீசி இருக்கும்—இங்கிலாந்தில் கண்டனம் கிளப்புகிறவரையில் விடாது வீசிய வண்ணம் இருக்கும்!

பருவத்தில் பணத்தைத் திரட்டி வைத்துவிட்டு, வாழ்க்கையின் இறுதியை வந்தடைந்துள்ள வயோதிக 'அரசியல் விற்பன்னர்கள்' 'பிரஜா உரிமை' குறித்த மன்றங்களில் பறைசாற்றி இருப்பர்!

ஆனல், இன்றே!

காங்கிரஸ் ஏடுகள் வாயடைத்துப் போயிருக்கின்றன.

'பிரஜா உரிமை'ப் பாதுகாப்பாளர்கள், 'குடியாட்சியில் மக்கள் கடமை' என்பது பற்றி விளக்குவதற்கு ஏற்ற அரங்குகளைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்!

டெல்லி ஆதிபத்தியம் இதை உணரவேண்டும்—'மராட்டிய மக்களின் மாவீரம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மட்டுந்தான் பயன்படும்; வேறு எதற்கும் பயன்படாது'—என்ற தவறான எண்ணத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

மராட்டிய மக்களின் விருப்பப்படி 'மராட்டிய மண்டலம்' அமைக்க ஒருப்படாது, காங்கிரஸ் மேலிடத்தார் முடிவு கட்டியுள்ள மூன்று மாநில ஏற்பாட்டை துப்பாக்கி முனையில் வெற்றிபெறச் செய்துவிடலாம் என்ற போக்கு, டில்லி ஆதிபத்தியத்திற்கு இருக்கக் கூடாது. இந்த மகத்தான உண்மையைத்தான் மராட்டியர்களின் தவறான நடவடிக்கை சுட்டிக்காட்டுகிறது.

தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள மராட்டியர் ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள பலாத்காரச் செயல்கள் கண்டிக்கத் தக்கவை—மக்கள் நலம் தேடுவோரால் வெறுத்து ஒதுக்கத் தக்கவை.

மராட்டியர் மேற்கொண்ட பலாத்காரச் செயல்களுக்கு, அவர்களையே முழுதும் பொறுப்பாளிகளாக்குவதும் பொருந்தாது. காங்கிரஸ் மேலிடத்தாரும், அவர்களைத் தாங்கி நிற்கும் பம்பாய் காங்கிரஸ் குழுவினரும் தான் பொறுப்பாளிகள் ஆவர்.

டெல்லி ஆதிபத்தியமும் மனமாற்றம் பெற்ருக வேண்டும்—அதுவும் உடனடியாக! அது போன்றே மராட்டிய மண்டலம் கோருவோரும் அமைதியை நாட வேண்டும்

வேடிக்கையல்ல – விசித்திரமல்ல– வேதனைதான்!

மதுரை, நவ. 21—

சென்னைக்குத் தெற்கேயுள்ள இரயில்வே நிலையங்களின் பெயர்களை இந்தியுடன், தமிழ், ஆங்கிலம் ஆகிய எழுத்துக்களிலும் எழுதுமாறு இரயில்வே 'போர்டை' மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சபை கேட்டுக் கொண்டிருக்கிறதாம்.

பழைய பல்லவிதான்!

கேள்வி நேரத்தின்போது மக்கள் சபையில் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி இந்தியாவுக்கு வருவோர் தொகை சென்ற மாதத்தில் அதிகரித்திருப்பதாக குடியிருப்பு இலாகா அமைச்சர் அறிவித்துள்ளார். செப்டம்பரில் 10,966 பேரும், அக்டோபரில் 16,144 பேரும் வர்தனராம்.

'பாரதியார் குடியிருந்த வீடுகள் பலப்பல'

எது வாங்குவதென்பதில் திகைப்பு!

பிரச்சினையைக் கைவிடுகிறது சென்னை ஆட்சி

சென்னை, நவ. 21—

"சென்னை திருவல்லிக்கேணியில் சுப்பிரமணிய பாரதியார் வசித்திருந்த வீட்டை வாங்கும் யோசனையை சர்க்கார் கைவிட்டுவிட்டனர்; சென்னை நகரில், பல வீடுகளில், பாரதியார் வாடகைக்குக் குடியிருந்திருப்பதால், எந்த வீட்டை வாங்குவது என்பதை நிர்ணயிப்பதில் சங்கடமான பிரச்சினை ஏற்பட்டுவிட்டது,"

என்று, மேல்(சட்ட)சபையில், அமைச்சர் பக்தவத்சலம், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி: சர்க்காரின் விசேட உதவியுடன் ஒரு தேசிய நூல் நிலையத்தை பாரதியார் வசித்த திருவல்லிக்கேணி வீட்டில் துவக்குவதற்கு சென்னை நூல்நிலைய நிறுவனத்தார் தெரிவித்துள்ள யோசனையை சர்க்கார் கவனிக்குமா?

அமைச்சர்:—ஏற்கனவே பாரதியாருக்கு நினைவு மண்டபம் இருக்கிறது; நூல்நிலைய நிறுவனத்தார் பாரதியாருக்கு நினைவுக்கூடம் ஆரம்பிக்க விரும்பினுல், அது வரவேற்கப்படும்.

இடையில், தோழர் சக்கரை செட்டியார் அவர்கள் குறுக்கிட்டு' சென்னை தம்புசெட்டித் தெருவில் பாரதியார் முதன் முதலில் குடியிருந்த வீட்டை வாங்கலாமென்றும், அந்த நாட்களில் அங்கு அவரை, தான் அடிக்கடி சந்திப்பது வழக்கமென்றும் குறிப்பிட்டார்.

அமைச்சர்:—பாரதியார் முதன் முதலில் குடியிருந்த வீட்டைவிட, கடைசியாக அவர் வசித்திருந்த வீட்டை வாங்க வேண்டுமென்று வேறு பலர் யோசனை கூறுகின்றனரே!

மத்திய சர்க்கார் முன்வருமா?

மக்கள் சபை உறுப்பினர்களின் கோரிக்கை நிறைவேறுமா?

சென்னை, நவ. 22—

தூத்துக்குடி அருகே ஒட்டப்பிடாரத்தில் உள்ள காலஞ்சென்ற திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் இல்லத்தை இந்திய அரசாங்கம் வாங்கி அதை ஒரு தேசியச் சின்னமாகப் பாதுகாக்க வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரசுக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. பி. கக்கன் தலைமையில் 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இவர்களில், சென்னை, மைசூர், திருவாங்கூர்-கொச்சி ஆகிய மூன்று மாநிலங்களையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிருர்கள்.

காலஞ்சென்ற திரு. வ உ சிதம்பரம் பிள்ளை விடுதலைப் போராட்டத்தின் முன்னணி வீரர்; முதன் முதல் சுதேசி கப்பல் போக்குவரத்து நடத்தியவரும் ஆவார்.

'தேசியச் சின்னமாகப் பாதுகாக்க வேண்டும்' என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டுள்ள வீடானது, வ. உ. சி குடும்பத்தின் புராதன இல்லமாகும். இது தற்போது சீர்கெட்ட நிலைமையில் இருக்கிறது.

தேசிய இயக்கத்தில் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் சேவைகளை எண்ணும்போது அவருடைய இல்லத்தைச் சீர்படுத்தி தேசிய சின்னமாகப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம் என இவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ரூ. 25 கோடி செலவில்

புதுடில்லி, நவ. 22—

சனரக மின்சார சாதனங்கள் உற்பத்திச் சாலைக்கான மூலதனச் செலவு ரூ. 25 கோடி ஆகுமென்று இப்பொழுது மதிப்பிடப்பட்டுள்ளதாம்; நிலம், தொழிற்சாலையைச் சேர்ந்த காலனி ஆகியவற்றிற்கான செலவுகள் இதில் சேராதாம்.

ரூ. 10 லட்சம்தானே!

புதுடில்லி, நவ 21—

பக்ரா அணைக்கட்டுப் பகுதியில், வெள்ளத்தினுல் ஏற்பட்டுள்ள சேதத்தைச் சீர்செய்ய சுமார் ரூ 10 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாக மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுகள் துளைக்க முடியாத இரயில்வண்டி!

துப்பாக்கிக் குண்டுகள் துளைக்க முடியாத விசேட இரயில் வண்டி ஒன்று சீனத் தலைவர் மா-சே-துங்குக்கென நிர்மாணிக்கப்படுமாம்.

நீலகிரியில் காகிதத் தொழிற்சாலையாம்!

சாத்தியக்கூறுகளை ஜெர்மன் நிபுணர்கள் ஆராய்வராம்!

சென்னை, நவ. 22—

நீலகிரியில் காகிதத் தொழிற்சாலையொன்று ஆரம்பிப்பது சம்பந்தமான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு சென்னை வந்துள்ள இரு ஜெர்மன் நிபுணர்கள் உதகை சென்றுள்ளனர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், உதகையில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காகித உற்பத்திக்கு சென்னையில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்கள் பற்றி அந்த நிபுணர்கள் சென்னை அதிகாரிகளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டதாகத் தெரிகிறது.

இந்திய சர்க்காருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்னர், நீலகிரிக்குச் சென்று அங்கு கிடைக்கும் மூலப் பொருள் வசதிகளை ஆராயப்போவதாக ஜெர்மன் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

---

26 பஸ்கள்தான் நின்றுவிடுகிறதாம்!

கேள்வி நேரத்தின் போது சென்னை சட்டசபையில் அமைச்சர் பரமேசுவரன், சர்க்கார் பஸ் போக்குவரத்தில் தினந்தோறும் 26 பஸ்கள் நின்றுவிடுகின்றன என்று கூறினர்.

மதுரைக்குப் புதியதோர் மருத்துவமனையாம்!

சென்னை மேல்(சட்ட)சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மதுரையில் ஒரு புதிய வைத்தியக்கார மருத்துவ மனையை நிறுவுவது குறித்து சர்க்கார் பரிசிலனை செய்துவருவதாக சுகாதார அமைச்சர் எ. பி. ஷெட்டி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் பொருட்காட்சியால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மையென்ன?

சென்னை சட்டசபையில் கேள்வி

சென்னை, நவ. 21—

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் பொருட்காட்சியில், சென்னை அரசாங்க இலாகாக்கள் பங்கெடுத்துக் கொண்டதால் சர்க்காருக்கு ரூ $2\frac{1}{2}$ - இலட்சம் செலவாயிற்றென்றும், இதனால் வருமானம் ஒன்றும் கிடைக்கவில்லையென்றும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

கே :— பொருட்காட்சியில் பங்கெடுத்துக் கொண்டதால், இம்மாநிலத்திற்கு ஏற்பட்ட நன்மை என்ன?

அமைச்சர் :- ஜனநாயக ஆட்சியில், அரசாங்கம் தனது நடவடிக்கைகளைப் பற்றி விரிவாகப் பிரச்சாரம் செய்வது அவசியம்; இதற்குப் பொருட்காட்சி பயன் தருவதாக இருந்தது.

கே :- கண் காட்சிகள் அவசியந்தான்; ஆனால், ஒரு அரசியல் கட்சி இலாபமடைவானேன்? சர்க்காரே கண்காட்சியை நடத்தலாமே?

அமைச்சர் :- சர்க்காரே நடத்தினால், அதிகச் செலவாகியிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

வேலை தேடித்தரும் நிறுவனங்கள்

பயிற்சிப் பள்ளிகள் அமைப்பதற்குத் திட்டம்

சென்னை, நவ. 21—

நுட்ப வேலைக்காரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், பயிற்சிச் சாலைகளில் உள்ள இடங்களை அதிகரிப்பதற்கும் ஆறு அம்சங்கள் கொண்ட திட்டமொன்றை வேலை தேடித் தரும் இலாகா தயாரித்திருக்கிறது இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் சேர்க்கப்படுவதற்காக அனுப்பப்படும்.

சென்னை, ஆந்திரா, மைசூர், திரு—கொச்சி, குடகு ஆகிய மாநிலங்கள் கொண்ட தென்பகுதியில் இப்போது 2,000 பேர்களுக்குப் பயிற்சியளிக்க வசதி இருக்கிறது; மேற்கொண்டு 1,000 பேர்களுக்குப் பயிற்சியளிக்க இப்போது திட்டம் போடப்பட்டிருக்கிறது.

பொழுதுபோக்கைப் போன்று ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்படும். 250 பேருக்கு இந்த வசதி செய்து தரப்படும்

சர்க்கார் நிறுவனங்களிலும், தனிப்பட்ட தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

சென்னை மாநிலத்தில் மட்டும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு ரூ 16 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது.

ஏழை - எளியவருக்கும் திட்டம் பயன்தருமா?

சிகிச்சைமுறைபற்றி சென்னை சர்க்கார் பரிசீலிக்கும்

சென்னை, நவ 22—

க்ஷயரோக நோயாளிகளுக்கு சென்னை நகரத்தில் அவரவர் வீடுகளிலேயே சிகிச்சை அளித்து, சானடோரிய சிகிச்சையினால் கிடைக்கும் பலன்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க இப்போது உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சர்க்கார் சில அந்நிய நிறுவனங்களின் உதவியுடன், எழும்பூரில் வீட்டுக்கு வீடு சென்று இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று தெரிகிறது. சானடோரிய சிகிச்சை அதிக செலவு பிடிப்பதாக இருப்பதனால் இந்த முறையை மேற்கொள்ளுவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது இதற்காகப் பல டாக்டர்கள் நியமிக்கப்படுவார்கள்.

க்ஷயரோகத் தடுப்புப் பிரச்சினை சம்பந்தமாக சர்க்கார் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளினால், க்ஷயரோகத்தினால் ஏற்படும் மரண விகிதம் குறைந்திருக்கிறதே தவிர, க்ஷயரோகம் பீடிக்கும் விகிதம் குறையவில்லை. க்ஷயரோகிகளுடன் இடைவிடாமல் தொடர்புள்ளவர்களாக இருக்கும் நபர்களுக்குத் தடுப்பு முறையாக 'ஐ. என். எச்' மாத்திரைகளை விநியோகிப்பது பற்றியும் சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது.

க்ஷயரோக தடுப்புக்கு பி. சி. ஜி. ஊசி குத்தும் முறை விரிவாகக் கையாளப்படுவது போன்றே ஐ. என். எச். மாத்திரைகளும் தடுப்பு மருந்தாக உபயோகிக்கப்படுகிறது.

கல்லூரி ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம்

சர்க்கார் நிலைபற்றி அமைச்சர்

சென்னை, நவ 21—

பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசு செய்துள்ளபடி 1956 - ஏப்ரல் முதல், இம்மாநிலத்திலுள்ள 'சர்க்கார் கல்லூரி'களில் மட்டும் சம்பள விகிதங்களை அமுல் நடத்துவது குறித்து ஆலோசனை செய்து வருகின்றனரென்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சட்டசபையில் அமைச்சர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

தனிப்பட்ட கல்லூரி ஆசிரியர்களுக்கு, இச்சம்பள விகிதங்களை அமுல் செய்வது பல்கலைக் கழகங்களைப் பொறுத்த பிரச்சினை யென்றும், சர்க்கார் தங்கள் பங்கை அதிகமாகத் தருவதைத் தவிர வேறு ஒன்றும் செய்யாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

'நர்ஸ்'கள் நியமன அம்சம் பற்றி அமைச்சர்

"நர்ஸ்கள் நியமிக்கப்படுவது திறமையைக் கவனித்தா? அல்லது அவர்களுடைய நிறம், அழகு ஆகியதற்றைக் கவனித்தா?" என்று, சென்னை சட்ட சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், சுகாதார அமைச்சர், 'எல்லா அம்சங்களும் தான் கவனிக்கப்படுகின்றன,' என்று குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார் :—

"1950 ஜனவரி முதல் 1954 டிசம்பர் முடிய சென்னை மாநிலத்தில் 938 நர்ஸ்கள் பயிற்சி பெற்றனர்; 110 நர்ஸ்கள் வேலை பெறவில்லை."

நகர அபிவிருத்தித் திட்டம் சர்க்கார் அளித்த கடன்

சென்னை, நவ. 22—

1955—56-ம் ஆண்டிற்கு நகர அபிவிருத்தித் திட்டத்திற்காக நகரசபைக்குக் கடனாக 5,75,000 ரூபாய் சர்க்கார் அளித்திருக்கிறதாம். இதில் ரூ. 3 இலட்சம் ஷெனாய் நகர் வீடு கட்டும் திட்டத்திற்கும், பாக்கியுள்ள ரூ 2,75,000 தண்டையார்பேட்டையில் இரண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிலம் வாங்குவதற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பரிசீலிக்கின்றனராம்!

உதவி பெற்று தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளை சர்க்காரே ஏற்று நடத்துவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக சட்டசபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

"இது பற்றி ஆரம்பக் கல்விச் சீர்திருத்தக் குழு சில சிபாரிசுகளை செய்துள்ளது; அவற்றைப் பரிசீலனை செய்து, இறுதியில்தான் இது பற்றி ஒரு முடிவுக்கு வர முடியும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

தூங்கும் சர்க்கார் அலுவலகங்கள்

சங்கு ஊதுகிறது சர்க்கார்!

சென்னை, நவ. 21—

சர்க்கார் அலுவல்களைப் 'பைசல்' செய்வதிலும், குறிப்பாக அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் பிரச்சினையிலும் அனாவசியமான காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டுமென்று சர்க்கார் இலாகா தலைவர்களை எச்சரித்திருக்கிறது.

1950-ல் ஒரு தவறு நடந்திருக்கிறது. ஐந்து ஆண்டுகளாகியும் இன்னும் அதைப்பற்றி முடிவாக ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. இதில் சம்பந்தப்பட்ட சில அதிகாரிகள் பதவியிலிருந்து விலகிவிட்டனர் இந்த நிலைமையில் இது சம்பந்தப்பட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்வதைத் தவிர சர்க்காருக்கு வேறு வழியில்லை.

சர்க்கார் இப்போது இலாகா தலைவர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், இந்த சம்பவத்தை உதாரணமாகக் காட்டியிருக்கிறார்கள்.

எந்த விஷயத்திலும் இம்மாதிரி நீண்டகாலத் தாமதம் ஏற்படுவதை சர்க்கார் கண்டிப்பாக அனுமதிக்க மாட்டார்களென்று சுற்றறிக்கை கூறுகிறது.

கிராமங்களுக்கு குடிநீர் விநியோகத் திட்டம்

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, நவ. 21—

பெரிய பஞ்சாயத்துப் பகுதிகளிலும், கிராமப் புறங்களிலும் குடிநீர் விநியோகத்திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் 1954-55ல், ரூ. 29,70,000 மானியம் அளித்ததென்றும், உள்ளாட்சிக் கழகங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்குமாக இத்திட்டத்திற்கு சென்னை சர்க்கார் ரூ. 36,43,843 அளித்துள்ளதென்றும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் சட்ட சபையில் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரிசன மக்கள் வாழுமிடங்களில் கட்டப்படும் கிணறுகளுக்குச் செலவிடுவதற்கு ரூ. 15,46,770 அனுமதிக்கப்பட்டதென்றும் அவர் கூறினார்.

தாராளமே தாராளம்!

சென்னை, நவ. 21—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நெசவாளர்கள் சேருவதற்கான பங்கு மூலதனத்திற்கும், நடைமுறை மூலதனத்திற்கும் உதவுவதற்கென, கைத்தறி 'செஸ்' நிதியிலிருந்து வட்டியில்லாக் கடனாக ரூ. 64 இலட்சம் இந்திய சர்க்கார் ஒதுக்கியுள்ளதாகக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மேல் (சட்ட) சபையில், அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

தி. மா. மு. கழக மாநில மாநாடு

வரவேற்புக் குழுத் தலைவர்

தோழர் டி. கே. பொன்னுவேலு வரவேற்புரை

"திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் இதுவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு அங்கமாகவே இயங்கிவருகின்றது. தி. மு. கழகம் தனது முதல் மாநாட்டிலே தி. மா. மு. கழகத்தை ஒரு அமைப்பாக ஏற்றுக் கொண்டிருக்கின்றது. வரவேற்புக் குழு சார்பில் அதனை இப்பொழுது கவனமூட்டி, தாய்க் கழகம், சட்ட திட்டதின் மூலம் மாணவர் கழகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தி. மா. மு கழகத்திற்கென்று ஒரு அமைப்பு முறையையும், சட்டதிட்டத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். நான்கு நாட்கள் நடக்கவிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில், மாணவருக்கென்று ஒரு நாளையோ, அல்லது குறிப்பிட்ட நேரத்தையோ ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"மாநாடு நடத்தும் இந்த நேரத்தில், மாணவர்களை எதிர்நோக்கி சில பிரச்சினைகள் இருக்கின்றன; நமது சரித்திரம் சரியான முறைப்படி எழுதப்படவில்லை என்ற பெரிய குறை நம்மால் மட்டுமே அல்லாமல், பொதுவாக, படித்து உணர்ந்த மாற்றார் எல்லோராலுமே உணரப்படுகின்றது. இந்தப் பெரிய குறையை நாம் என்ன விலை கொடுத்தேனும். போக்கியே ஆக வேண்டும்; இதற்கான பெரு முயற்சியில் ஈடுபட படித்தவர்களில் சிலர் பங்குகொள்ள வேண்டும். தி. மு கழகமும் அதற்காக வழி வகைகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"நம்முடைய மொழி, பண்பு, கலை, கலாச்சாரம், நாகரீகம் போன்றவற்றை மிக நல்லமுறையிலே நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்; அதற்கு நல்லதொரு பல்கலைக் கழகம் தேவைப்படுகின்றது. இந்த ஆராய்ச்சி செய்ய சென்னை பல்கலைக் கழகமோ அல்லது அண்ணாமலை பல்கலைக் கழகமோ நமக்குப் பெருந்துணையாக இருப்பதில்லை—இருக்க முடிவதில்லை; அங்கெல்லாம் அவர்கள் அரசாங்கத்தின் ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டு, ஆராய்ச்சியின் விருப்பு வெறுப்பற்ற முடிவுகளை வெளியிடுவதாகத் தெரிவதில்லை; இந்தப் பெரிய குறையையும் நாம் போக்கியாக வேண்டும். இந்த எண்ணத்தை சிதம்பரம் தி. மு. கழக 2-வது மாவட்ட மாநாட்டில் அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்கள் வற்புறுத்தினார்கள்; அப்போது அண்ணா அவர்களும், அதனை வரவேற்றார்கள்—அதற்காகப் பணி செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள். அதனை இப்போது மீண்டும் நினைவுபடுத்தி, அதற்கான செயல் முறையில் தி. மு. கழகம் ஈடுபட வேண்டும் என்றும் மாநாட்டின் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படி திராவிட முன்னேற்றக் கழகம் செயல் முறையில் ஈடுபடும்போது, தி. மா. மு. கழகம் தனக்கு இடப்படும் கட்டளைகளை செவ்வனே செய்து முடிக்கும் என்றும் கூறிக் கொள்ளுகின்றேன்.

"நம்மை எந்த நேரமும் பயமுறுத்தியவண்ணம் இந்த இந்தித் தொல்லை இருந்து வருகிறது. மத்திய சர்க்கார் சம்மந்தப்பட்ட எல்லா வேலைகளிலும், இந்தியை படிப்படியாகவும், மிக மிக வேகமாகவும் புகுத்தி வருகின்றார்கள். முன்பெல்லாம் இந்தியில் தபால் தலைகளும், அஞ்சல் அட்டைகளும் வழங்கப்பட்டு வந்தன. இப்போது அங்கு இந்தியிலேயே பெயர்களும் இருக்க வேண்டுமாம். அதற்காகத் தனியாக இந்தி மொழி வல்லுனரான அதிகாரிகள் வேறு நியமிக்கப்பட்டுள்ளனராம். இந்த அநியாயத்தை நாம் ஒழித்தாக வேண்டும். இதற்கான மிகத் தீவிரமான நடவடிக்கைகளில் தி. மு. க. ஈடுபட வேண்டும் என்று தி. மா. மு. கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இந்தக் காரியங்களையெல்லாம் செய்துமுடிக்க, மாணவரிடையே ஒற்றுமை மிக மிகத் தேவை. திராவிட மாணவத் தோழர்களிடையே மொழிவழிப் பூசல் நல்லதல்ல; அதுபோன்ற வெறுக்கத்தக்க செயல்களை நாம் தவிர்த்தாகவேண்டும். தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னட மாணவர்களிடையே நல்ல ஒற்றுமையை வளர்த்தாகவேண்டும், அப்போதுதான் மாணவர் உலகு உண்மையான பலத்துடன் இயங்க முடியும் என்பதையும் நாம் உணர்ந்தாகவேண்டும்,"

ஒன்று செய்தனர்—நன்றே செய்தனர்!

சென்னை, நவ. 21—

தேவிகுளம், பீர்மேடு, காசர்கோடு போன்ற தகராறு பகுதிகள் சம்மந்தமாக சட்ட சபைகளில் திருத்தங்கள் கொண்டுவரவும், திருத்தங்கள் மீது அவர்கள் விருப்பம் போல் வாக்கு அளிக்கவும் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டு, சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது

தொழிலாளர்களுக்குக் குடியிருப்புத் திட்டம்

சென்னை, நவ. 22—

செம்பியத்திலும், எருக்கஞ்சேரியிலும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்துக்கு சென்னை சர்க்கார் அனுமதியளித்துள்ளனராம்.

இதற்கான செலவு ரூ. 28,03,840 இதற்கு மத்திய சர்க்கார் ரூ. 12,46,420 நிதி உதவி செய்துள்ளதாம்; இதே அளவு தொகையை கடனாகவும் வழங்கியுள்ளதாம்.

மாநில சர்க்காருக்கு ஏற்படக்கூடிய செலவு ரூ. 15,57,420. செம்பியத்தில் 486 வீடுகளும், எருக்கஞ்சேரியில் 450 வீடுகளும் கட்டப்படும்

மீனவர் குடும்பங்களுக்குக் குடியிருப்பு வசதி

சென்னை, நவ. 22—

மண் அரிப்புக் காரணமாக வட சென்னையில் வீடுகளை இழந்த 282 மீனவர் குடும்பங்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதற்காக மனைகளை வாங்கும் திட்டம் ஒன்றை சர்க்கார் அனுமதித்துள்ளனராம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

மாநில மாநாட்டு நிதி

★

செலுத்த வேண்டிய பங்குத் தொகையில் செலுத்தாமல் பாக்கியாக வைத்திருக்கும் தொகைகளை உடனடியாகத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும்படி மாவட்டக் கிளைகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

இதுவரையில் நிதி திரட்டித் தராத சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைகள் தம்மால் ஆன அளவு நிதி திரட்டி அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

கழகத் தோழர்களும், கழகத்திடத்தே பற்றுக் கொண்டுள்ளவர்களும் தனிப்பட்ட முறையில் தம்மால் இயன்ற அளவு நிதி திரட்டி அனுப்பும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
17-11-'55

—தி.மு.க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

‘தேவிகுளம், பீர்மேடு தமிழகத்துடன் சேர வேண்டியதே’

புள்ளிவிவரங்களுடன் சென்னை நிதி அமைச்சர் காரணம் காட்டுகிறார்

“தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் உத்தேச கேரள மாநிலத்துடனேயே இருக்கவேண்டும் என்பதற்காக மாநில சீரமைப்புக் குழுவினர் கூறுகின்ற வாதங்களை நோக்கும்போது ஆச்சரியம்கூட ஏற்படுகிறது. கேரள மாநிலத்தின் பொருளாதார நிலையையொட்டி மட்டும் இந்தக் கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்குமானால்கூட யாரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்க முடியாது; ஆனால், மாநில சீரமைப்புக் குழுவினரே, அப்பகுதிகள் கேரளத்துடனேயே இருக்கவேண்டுமென்பதற்காகக் கூறும் பல்வேறு காரணங்களைப் பார்க்கும்போதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.”

—என்று, சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், மாநிலப் புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் குறித்து சென்னை சட்ட சபைக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறினார்:—

“மாநிலப் புனரமைப்புக் குழுவினர், தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களில் வாழ்பவர்களில் 72 சதவிகிதத்தினர் தமிழர்கள்தான் என்பதை ஒப்புக்கொண்டிருந்தும்கூட, அங்குள்ளவர்களெல்லாம் நிரந்தரமாகவே அங்கு குடியிருப்பவர்கள் அல்லர் என்று குறிப்பிட்டிருக்கின்றனர்; எந்த அடிப்படையைக் காரணமாகக் கொண்டு குழுவினர் இந்த முடிவுக்கு வந்தனர் என்று தெரியவில்லை. தேவிகுளம், பீர்மேடு ஆகிய இரு பகுதிகளிலும் நிரந்தரமாக இல்லாத தமிழர்கள் முறையே 30,46 சதவிகிதத்தினர் என்றும், நிரந்தரமாக அங்கு குடியிருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை 14,27 சதவிகிதம்தான் என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். இந்தப் புள்ளி விவரம் அவர்களுக்கு எப்படி கிடைத்தது என்பதை மட்டும் குழு தெரிவிக்கவில்லை.

“அது தவிர, அங்குள்ளோருடைய பிறந்த ஊர் பற்றிய தகவல்களை சேகரித்ததிலும் குழுவினர் தவறு செய்திருக்கின்றனர்; தேவிகுளம், பீர்மேடு பகுதிகளுக்கு வெளியே பிறந்த தமிழர்களையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொள்ளாத குழுவினர், மலையாளம் பேசுவோரது பிறந்த இடம் குறித்த புள்ளி விபரம் சேகரிப்பதில் அதனைக் கையாளவில்லை.

தேவிகுளத்தைப் பொறுத்தமட்டிலும் 1931-ல் எடுத்த கணக்குப்படி 51,730 தமிழர்களும், 3,894 மலையாளிகளும் இருந்தனர்; 1941-ல் 53,394 தமிழர்களும், 8,282 மலையாளிகளும் இருந்தனர்; 1951-ல் 62,130 தமிழர்களும், 16,056 மலையாளிகளும் இருந்தனர். 1931-ம் ஆண்டுக் கணக்குப்படி அங்கிருந்த மலையாளிகளின் எண்ணிக்கையான, 3;894, என்னதான் மனித உற்பத்தி பெருக்கத்தின் காரணமாக இருந்தாலும், 1951-ல் அந்த எண்ணிக்கை 16,000 ஆக உயர்ந்தது என்று கூறப்படுவது உண்மை தானா என்பதே புரியவில்லை!

தேவிகுளத்தில் தரப்பட்டிருப்பதைப் போலவேதான், பீர்மேட்டிலும் 1931-ல் 24,776 தமிழர்களும், 19,284 மலையாளிகளும் இருந்தனர் என்றும், 1941-ல் 31,911 தமிழர்களும், 31 000 மலையாளிகளும் இருந்தனர் என்றும், 1951-ல் 42,590 தமிழர்களும், 50,000 மலையாளிகளும் இருந்தனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. இங்கும், 1931-லிருந்து 1951 வரையிலுள்ள 20 ஆண்டு காலங்களில், தமிழர் தொகை 24,000-த்திலிருந்து 42,000 ஆக உயர்ந்திருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிற அதே நேரத்தில், மலையாளிகள் தொகை மட்டும் 19,000 என்ற தொகையிலிருந்து வெகு சுலபமாக 50,000 என்ற தொகைக்குப் பெருகிவிட்டனர் என்று காட்டப்பட்டிருக்கிறது!

‘இந்த இடத்தில், முன்னாள் முதலமைச்சராக இருந்த பட்டம் தாணுப்பிள்ளைகூட, இந்தப் பகுதிகள் மலையாளிகளின் தொகையைப் பெருக்க காலனி குடியமைப்புத் திட்டத்தைத் துவக்க வேண்டுமென்று பலமுறை குறிப்பிட்டிருந்ததை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தேவிகுளம் பகுதியில் பள்ளிவாசல், பீர்மேடு பகுதியில் பெருவர்தனம் ஆகிய இந்த இரு இடங்களில் மட்டும்தான் மலையாளிகளைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இடம். அந்தப் பகுதிகளிலெல்லாம் தமிழர்கள் குடியேறி அவற்றை சீராக்கி செப்பனிட்ட பின்னர்தான் மலையாளிகள் அங்கு வந்தனர். இந்தத் தாலுகாக்கள் எப்படியோ சரித்திர நிகழ்ச்சிகளின் விளைவாகத்தான் கேரள மாநிலத்துடன் இணைந்து கிடக்கின்றன. மலையாள சர்க்காராக இருந்தபோதிலும்கூட, தமிழர்கள் அப்பகுதிகளைச் சீரமைப்பதில் கடும் உழைப்புத் தந்தனர். இந்த மறுக்க முடியாத உண்மைகள், மாநில புனரமைப்புக் குழுவினரால் மறைக்கப்பட்டிருக்கக் கூடாது.

அங்குள்ள ஏலக்காய் தோட்டங்களில் 90 சதவிகிதமும் தமிழர்களையேதான் சார்ந்தது; மற்றவைகளில் சிறு பகுதி வெளி நாட்டவரைச் சேர்ந்தவை; ஆக, மலையாளிகளுக்கென்று அங்குள்ள சொத்தெல்லாம் மொத்தத்தில் 10 சதவிகிதத்திற்குக்கூடக் குறைவானதேயாகும்.

இந்தப் பகுதிகளில் உள்ள சில ஆறுகளின் துவக்கங்களையும், அவைகள் ஓடும் பகுதிகளையும் கொண்டே மாநில புனரமைப்புக் குழுவினர் சரியான ஒரு முடிவுக்கு வராமல் இருந்திருக்கின்றனர்.

திருவாங்கூர் மாநிலம் தேவையான அளவிற்குத் தண்ணீர வசதி பெற்றிருக்கிறது. அப்படி தேவைக்கு மிஞ்சின அளவு தண்ணீர் பெற்றிருந்தும்கூட, கேரள மாநிலம், தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கொடுக்க மறுத்துவிட்டது. தண்ணீர்ப் பிரச்சினையை முன் நிறுத்தும்போதுகூட, இந்த இரு பகுதிகளும் சென்னை மாநிலத்துடனேயே இணைக்கப்பட வேண்டும் என்ற விவாதத்திற்கு அதிக ஆதரவு கிடைக்கிறது. சென்னை மாநிலத்திற்கு இப்போதுள்ள ஒரே ஒரு முக்கிய நதி காவேரி மட்டும்தான். எனவே, சென்னை மாநிலம், தனது பொருளாதார நிலையை விருத்தி செய்துகொள்ள இன்னும் அதிகமான நீர்ப்பாசன வசதி பெறவேண்டியதாக இருக்கிறது. அதேபோது, இப்பகுதிகளில் ஓடும் ஆற்று நீர் திரு-கொச்சி மாநிலத்திற்குத் தேவைப்படாமல் இருக்கின்றன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்

இந்த இரு பகுதிகளும் சென்னையுடன் இணைக்கப்படுவதற்கு ஆதாரமாக இல்லாமலிருந்தாலும், காடுகளின் தேவையைக் கருதும் போதும், ஆதாரமாகவேதான் இருக்கிறது. சென்னை மாநிலத்தில் அதிகமாக வனாந்திரப் பிரதேசங்கள் இல்லை. திரு—கொச்சி மாநில முட உத்தேச கர்நாடக மாநிலமும் வேண்டிய அளவிற்குக் காட்டுப் பகுதிகள் கொண்டிருக்கின்றன. எனவே, செங்கோட்டையைச் சேர்ந்த மலைப் பிரதேசங்களும், தேவிகுளம், பீர்மேடு போன்ற இரு மலைப் பகுதி தாலுகாக்களும் சென்னைக்குத் தேவைப்படுகின்றன.

சித்தூர், நெய்யாற்றங்கரை நிலை என்ன?

சித்தூர் தாலுகா முழுவதையும் கவனத்திலெடுத்தால் அங்கு மலையாளிகள்தான் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். ஆனால், சித்தூர் தாலுகா இரண்டு பகுதிகளாகத்தான் இருந்து வருகிறது. கோவையை அடுத்த சில சித்தூர் பகுதிகளில் சுமார் 14 கிராமங்களில் வாழும் மக்களில் தமிழர்களே பெரும்பான்மையினராக இருக்கின்றனர். அங்குள்ள எல்லாருடைய பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள், மற்றும் நிலச் சட்டம் ஆகியவற்றில் எல்லாம் தமிழர்களையே ஒத்திருக்கின்றனர். எனவே அந்தப் பகுதிகள் தமிழ் நாட்டுடன்தான் இணைக்கப்பட வேண்டும். இதுபோலவேதான் நெய்யாற்றங்கரை தாலுகாவிலுள்ள சில பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படவேண்டும்.

காசர்கோடு

காசர்கோடு தாலுகா முழுவதையுமே கர்நாடகத்துடன் இணைத்துவிடவேண்டுமென்ற கருத்துக்கு எதிர்ப்பு இருக்கத்தான் செய்கிறது. சந்திரகிரி, பயஸ்வினி ஆகிய இரு நதிகளும், இயற்கையாகவே காசர்கோடு தாலுகாவை இரண்டாகப் பிரித்து நிற்கின்ற எல்லைக்கோடுகளாக இருக்கின்றன. அந்த இரு நதிகளுக்கும் வடக்கே உள்ள பகுதிகளிலிருப்போர் கர்நாடக மொழி பேசுவோராதலால் அப்பகுதிகள் கர்நாடகத்துடனும், தெற்கில் உள்ளோரில் பெரும்பாலோர் (51 சத விகிதத்தினர்) மலையாள மொழியினராக இருப்பதால் கேரளத்துடனும் இணைக்கப்பட வேண்டும். காசர்கோடு தாலுகா முழுவதிலும் கணக்கிட்டால் மலையாள மொழியினர் 70 சத விகிதத்தினராக இருக்கின்றனர்.

கொள்ளேகாலம்

கொள்ளேகாலம் தாலுகாவைப் பொறுத்தமட்டில், தமிழ் மொழி பேசப்படும் பகுதிகளை ஒட்டிய மலைப் பகுதிகள் அனைத்தும் தமிழகத்துடன் இணைக்கப்பட்டாக வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் தாலுகாவை கேரளத்துடன் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டதை ஒட்டி சர்க்கார் பரிசிலனை செய்தாயும், அதன்போது, அந்தத் தாலுகா கேரளத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்பதற்கான எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை.”

கே. கே. நீலமேகம்

குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள், உடல் நலக் குறைவின் காரணமாக, 20—11—55 முதல் சென்னை சர்க்கார் போது மருத்துவமனை (ஜெனரல் மருத்துவவிடுதி) எண். 6 வார்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

திருமணம்

25—11—55 காலை 9 மணிக்கு, மல்லம்பாளையம், மணமகன் இல்லத்தில், தோழர் ம.ப நாச்சிமுத்து—தோழியர் அ. தி. இலட்சுமி திருமணம், தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெறும். தோழர் அ. பொன்னம்பலனூர் மணமக்களை வாழ்த்திப் பேசுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி.மு.கழக மாநில மாநாட்டு நிதிக்காக

கண்டும் கேட்டும் அறியாத

புதியதோர் முயற்சி! அரியதோர் நிகழ்ச்சி!

★

செவிக்கினிய இசை வழங்க

புரட்சிக் கவிஞரின்

கவிதைக் குவியல்களால்

நடிப்புப் புலவர்

கே. ஆர். ராமசாமி

அவர்கள் இன்னிசை விருந்தளிப்பார்

★

இடமும், தேதியும் எதிர்பாருங்கள்!

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அண்ணாதுரை கரூர் வருகை

★

“25-11-55 மாலை 5 மணிக்கு, கரூர் ரோட்டரி கிளப்பில் தோழர் சி.என்.அண்ணாதுரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

அன்று மாலை 7 மணிக்கு, கரூர் ஈஸ்வரன் கோவில் வடபுறம் உள்ள மைதானத்தில், தோழர் கே. ஏ. முருகேசனார் தலைமையில், தி. மு. கழகக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, ஈ. வெ கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவ. 25 காலை: பொள்ளாச்சி
மாலை: செய்க்காரப்பட்டி
26 கரியாப்பட்டி
27 பாண்டிச்சேரி

கழகக் கூட்டங்கள்

★

தாத்தையங்கார்பேட்டை

25—11—55 வெள்ளி மாலை

தலைவர்: எம். எஸ் .எஸ். இராசன்

பேசுபவர்:

முகவை ஆர். எஸ். பாண்டியன்

★

கூம்பூர்

25—11—55 மாலை 4 மணிக்கு, கூம்பூர் முத்தாலம்மன் கோவில் திடலில், கூம்பூர் தி மு. கழகத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் பி. சமதர்மா, கோ. வேங்கடாசலன், பி. ஐயா, கோ. சித்தழகன், க. அங்குசாமி, மற்றும் பலர் பேசுவர்.

தி. மா. மு. கழக 2-வது மாநில மாநாடு

வரவேற்புக் குழு உறுப்பினர்கட்கு

“26-11-55 மாலை 5 மணிக்கு, இராயபுரம், ‘அறிவகத்’தில், திராவிட மாணவர் முன்னேற்றக்கழக2-வது மாநிலமாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநாட்டு வரவு-செலவு கணக்குகள் ஒப்படைக்கப்படும்; மற்ற பிரச்சினைகள் பற்றியும் ஆலோசனை நடக்கும். அன்பு கூர்ந்து இதனையே அழைப்பாகக் கொண்டு கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,”

என்று, வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் டி. கே. பொன்னுவேலு அறிவிக்கிறார்.

பம்பாய் தி. மு. கழக

பொதுக்குழு உறுப்பினர்கட்கு

“பம்பாய் தி. மு. கழக பொதுக் குழுக் கூட்டம், 27-11-55 காலை 10 மணிக்கு, மாதுங்கா கிளைச் செயலாளர் தோழர் அன்புச் செழியன் இல்லத்தில், (சயன் அவுசிங் போர்டு, எண் T.15-18A-161)நடைபெறும். அதுபோது, தோழர் கண்ணதாசன் அவர்களது பம்பாய் சுற்றுப்பயணம் பற்றி முடிவு எடுக்கப்படும்,”

சென்னை 47-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

24—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை 47-வது வட்ட (தெற்கு தியாகராயநகர்) தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், சைதை, கடைத் தெரு, 95-ம் எண் இல்லத்தில் நடைபெறும்.

கடலூர் நகர தி.மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

26—11—55 இரவு 9 மணியளவில், கடலூர் நகர தி.மு. கழகக் கட்டிடத்தில், கடலூர் நகர தி. மு. கழகச் செயற் குழு அவசரக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பல முக்கிய பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும்.

பொதுக்கூட்டம்

24—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை அஞ்சல் பிரிப்பகத்தில், அகில இந்திய ஆர். எம். எஸ். ஊழியர் சங்கங்கள் (3-வது வகுப்பு, ஆர். எம். எஸ். மெயில் கார்டுகள் 4-வது வகுப்பு) சார்பில், தபால் தந்தி ஊழியர் தேசிய சம்மேளன முதல் ஆண்டு விழா தோழர் ஆர். முனிரத்தினம் தலைமையில் நடைபெறும்.

நாஞ்சில் கி. மனோகரன், வி. சண்முகநாதன் சுற்றுப்பயணம்

நவ. 24 குன்னூர்
25 பெங்கால் மட்டம்
26 ஓராகள்ளி

சொற் பயிற்சிக் கூட்டம்

24-11-55 மாலை 6½ மணிக்கு, திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் (சென்னை-பெத்து நாய்க்கன்பேட்டை, எண் 10, லாயர் சின்னதம்பி முதலி தெரு) தோழர் மு நடராசன் தலைமையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.